**தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் (''நிறுவனம்'') 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு இலக்கம் 10 இன் 19 ஆம் பந்தியின் பிரகாரம் சேவை வழங்கியதற்கான வருமானத்தை இனங்காணும் போது நிதிக் கூற்றுக்களில் அறிக்கை இடுகின்ற திகதியில் கொடுக்கல் | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வருமானங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வாங்கல்களின் ஒட்டுமொத்த நிலைமையைக் கவனத்தில் கொண்டு கொடுக்கல் வாங்கல் மற்றும் அது சார்ந்த வருமானங்களை இனங்காண வேண்டியிருந்த போதிலும் நிறுவனத்தால் ஆண்டின் போது கிடைக்கின்ற சகல பாடநெறி கட்டணமும் வருமானமாக இனங்காணப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் பாடிநெறிக் கட்டண வருமானம் ரூபா 2,623,742 அதிகரித்து இனங்காணப்பட்டிருந்தது. மேலும் ரூபா 1,345,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்த மொழி நிகழ்ச்சித் திட்டத்திற்கான முன்னரே முற்பணமாகக் கிடைத்த வருமானம் ரூபா 1,240,000 தொகைக்கு உரிய பாடநெறி மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பிரகாரம் வருமானங்கள் இனங்காணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 1,240,000 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கிரயம் ரூபா 21,260,122 ஆன முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்ற நிலையான சொத்துக்களின் இழிவுப் பெறுமதி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 92(ஆ) பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏற்றக்கொள்கின்றோம். தற்போது விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய பொருட்கள் இனங்காணப்பட்டு விற்குத் தீர்க்க வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் பயன்படுத்தக் கூடிய பொருட்களை மீள்மதிப்பீடு செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | முழுமையான பெறுமானத் தேய்வு செய்யப்பட்டு எனினும் தொடரந்தும் பயன் படுத்தப்படுகின்ற சொத்துக்கள் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மூலதன மாணியங்களில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட பரிமாற்றல் அல்லாத சொத்துக்களுக்குரிய பிற்போட்ட வருமானத்தின் இறுதி தவணைப் பணமான | ஏற்றுக்கொள்கின்றோம். பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களில் மாற்றங்களினால் ஏற்பட்ட இந்த ரூபா 636,332 இந்த மூலதன சீராக்கல் வருமானத்தில் / இலாபத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை | பொதுத் துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் மாற்றல்கள் அல்லாத வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 636,332 மீளாய்வாண்டின் வரமானத்தில் சீராக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமையின் காரணமாக சமமான அளவினால் வருமானம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | 2024 சனவரி 01 இல் உள்ளவாறு முதிர்ச்சி அடைவதற்கு காணப்பட்ட நிலையான வைப்புக்களுக்கான வட்டி வருமானமான ரூபா 7,799,990 பெற வேண்டிய வட்டி வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நிலையான வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்தும், நிலையான வைப்புப் பெறுமதி அப் பெறுமானத்தால் அதிகரித்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த வைப்புக்கள் 2022.12.30 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்ட நிலையான வைப்பாகும். அதன் காரணமாக 2023.12.31 ஆந் திகதியில் வருமானத்தில் இனங்காணப்பட்டுள்ளது. அது கிடைக்க வேண்டிய வருமானமாக சரி செய்யப்படல் வேண்டும். | வட்டி வருமானம் மற்றும் பெற வேண்டிய வட்டி சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 3,657,946 மற்றும் அகலவத்த பயிற்சி நிறுவனத்தால் ஏனைய நிறுவனங்களின் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 860,000 வருமானம் கணக்கீடு செய்யப்படாது இருந்ததுடன் செலுத்த வேண்டிய வளப் பங்களிப்பாளர் படிகள் ரூபா 165,600 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | பெற வேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்படவில்லை. உள்ளபடியாகக் கிடைத்த தொகை ரூபா 860,000.00 ஆகும். வளப் பங்களிப்பாளர் படிகள் குறைத்தக் காண்பித்தல் பட்டோலையின் பெறுமதி சேர்க்கும் போது ஏற்பட்ட வழுவாகும். | பெற வேண்டிய வருமானம் மற்றும் செலுத்த வேண்டிய செலவினங்கள் சரியாகக் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தளபாடம் மற்றும் அலுவலக உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் என்ற சொத்து வகுப்புக்களின் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 9,254,476 ஆக இருந்த போதிலும் கணக்காய்வின் | ஏற்றுக்கொள்கின்றோம். | சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சரியாகக் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணிப்பீட்டின் பிரகாரம் அது ரூபா 8,574,882 ஆனமையால் ஆண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 679,594 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) ரூபா 7,011,079 ஆன உணவு, பாணம் செலவினம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 6,803,893 ஆக காண்பிக்கப்பட்டமையால் இலாபம் ரூபா 207,186 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உணவு பானங்கள் பேரேட்டில் பெறுமதி மாற்றமடைந்தமை ரூபா 207,186 ஆக சரி செய்யப்படல் வேண்டும். | சகல செலவினங்களும் சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பித்தல் வேண்டும். |
| (ஊ) தம்புள்ள கிளை அலுவலக கட்டிடத்திற்காக 2022 செப்தெம்பர் 21 முதல் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய கட்டிட வாடகை ரூபா 206,873 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | 2024 மே 16 ஆந் திகதி வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதுடன் ரூபா 206,873 தொகை நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2022.09.21 ஆந் திகதி முதல் 2023.12.31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டிய வாடகை தொகையாக ஒதுக்கீடு செய்யப்படல் வேண்டும். | உரிய சகல செலவினங்களும் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (எ) 2016 ஆம் ஆண்டின் போது நன்கொடையாகக் கிடைத்த 32 கணனி மொனிட்டர்கள் மற்றும் துணைப் பாகங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர் காலத்தில் இது தொடர்பாக ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | நன்கொடையாகக் கிடைத்த சொத்துக்கள் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டின் போது கிடைக்க வேண்டிய நிகழ்ச்சித் திட்ட வருமானம் ரூபா 325,000 அறவிடப்பட்டிருக்க வில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெற வேண்டிய வருமானம் அறவிடப்படல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற ரூபா 3,791,972 ஆன செலுத்த வேண்டிய 03 செலவின விடயங்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்கள் தீர்த்து வைக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய செலவினங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 26 ஆம் இலக்க தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன சட்டத்தின் 8(i) (ஏ) பிரிவு | நிறுவனத்தின் வளப் பங்களிப்பாளர்களை நியமதித்தல் கல்விச் சபையின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 05 நாட்கள் ஆன குறுகிய கால ஆசிரியர் பயிற்ச்சி பாடநெறியில் வளப்பங்களிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் போது ஆகக் குறைந்த தகைமையான க.பொ.த (உயர் தரம்) சித்தி அடைதல் மற்றும் க.பொ.த (சாதாரண தரம்) உரிய பரீட்சைக்குச் சமமான தரத்தில் காணப்படாத 11 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். | நிறுவனத்தின் வளப் பங்களிப்பாளர்களைச் சேர்க்கும் போது 05 நாட்கள் பயிற்சிப் பாடநெறி நடாத்தி இறுதியில் வெளி பரிசோதனை சபையின் மூலம் மொழி அறிவு மற்றும் கற்கை திறன்கள் பரீட்சிக்கப்படுகின்றது. க.பொ.த (உயர் தரம்) சித்தி அடையாது இருந்த போதிலும் இரண்டாவது மொழி பாடநெறி அல்லது சான்றிதழ் பாடநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்த பாடநெறியாளர்களுக்கு இறுதிப் பரீட்சையில் சித்தியடைவதைக் கவனத்தில் கொண்டு 111 மட்டத்தில் கற்பதற்காக மாத்திரம் அனுமதிப் பத்திரம் வழங்கப்படுகின்றது. | சட்டத்திற்கு இணங்க ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை தொடர்பான சட்டத்தின் 41 ஆவது பிரிவின் கீழ் அமைச்சரால் தயாரிக்கப்பட்ட 2017 பெப்ரவரி 03 ஆந் திகதிய இலக்கம் 2004/66 என்ற வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை | நிறுவனத்தின் இணையதளம் 2021 ஆம் ஆண்டில் வடிவமைக்கப்பட்டிருந்த போதிலும் செயற்பாட்டு நிலைமையில் காணப்படாமை மற்றும் உரிய தரப்பினருக்கு தகவல்கள் தொடர்புபடுத்தப்படாமையின் காரணமாக சட்டத்தின் நோக்கம் நிறைவேற்றப்படாது இருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 465,000 தொகை பயனற்ற செலவினத்திற்கு உட்பட்டிருந்தது. | இது தொடர்பாக நிறுவனத்தின் முகாமைத்துவ சபைக்கு அறிவிக்கப்பட்டதுடன் அதன் போது புதிய இணையதளத்தை தயாரிக்குமாறு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | செலவிடப்பட்ட பயனற்ற செலவினம் தொடர்பாக முகாமைத்துவம் பொறுப்புடையதாக இருத்தல் வேண்டும். |
| (இ) | 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய இலக்கம் 02/2020 என்ற | மீளாய்வாண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2024 மார்ச் 31 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை | ஏற்றுக்கொள்கின்றோம். பொருட்களை விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையி | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரச நிதி சுற்றறிக்கையின் 11.1 ஆம் பிரிவு | அதிபதிக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | னால் அறிக்கை அனுப்பப்படவில்லை. செயற்பாடுகள் நிறைவு பெற்ற உடன் அறிக்கை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2015 மே 25 ஆம் திகதிய இலக்கம் PED/01/2015 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வாகனம் ஒன்று வழங்கப்பட்டுள்ள உத்தியோகத்தருக்கும், போக்குவரத்துப் படி பெறுகின்ற உத்தியோகத்தருக்கும் குழாம் வாகனங்கள் அல்லது ஏனைய அலுவலக வாகனங்கள் பயன்படுத்த முடியாமல் இருந்த போதிலும் நிறுவனத்தில் முன்னாள் தலைவர் 2022 ஏப்ரல் முதல் 2023 ஒக்தோபர் வரை 44 சந்தர்ப்பங்களின் போது அலுவலக வாகனத்தைப் பயன்படுத்தி கிலோமீற்றர் 19,342 ஓடியிருந்தார். | இந்த விடயங்கள் தொடர்பாக அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிதிப் பிரமாணம் 104 பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | முறையற்ற வகையில் வாகனத்தை பயன்படுத்திய உத்தியோகத்தர் தொடர்பாக முறையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். சுட்டத்திற்குப் புறம்பாக வாகனங்களைப் பயன் படுத்தியதற்கான கிரயம் அறவிடப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 92,498,166 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 47,596,386 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 44,907,780 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் பயிற்சி நிகழ்ச்சித் திட்ட செலவினம் ரூபா 21,786,422 இனால் அதிகரித்திருந்த போதிலும் பாடநெறி வருமானம் ரூபா 70,241,525 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தமிழ் மொழிப் பாடநெறியை ஒழுங்கமைப்பதற்காக ஸ்தாபிக்கப்பட்ட சங்கம் ஒன்றான தேசிய மொழி மேம்படுத்தல் சங்கத்திற்கு மொழி மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 200,000 முகாமைத்து சபையின் அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | இந்த தொகை செலுத்துவதற்காக முகாமைத்துவ சபையின் அங்கீகாரம் பெறப்படாது இருந்த போதிலும் அதற்காக முறையான பிரகாரம் நிறுவனத்தின் நிறைவேற்று உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய குழு ஒன்றின் மூலம் உரிய கொடுப்பனவுகள் | முறையான அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அங்கீகரித்த பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஆ) | நிறுவனத்தின் 503 வளப் பங்களிப்பாளர்கள் இருக்கும் போது மீளாய்வாண்டின் போது ஏனைய நிறுவனங்களின் மூலம் 177 பாடநெறிகளை இணைய வழி ஊடாக (Online) நடாத்தியதன் காரணமாக நிறுவனத்திற்கு பெறக் கூடியதாக இருந்த மொத்த வருமானத்தில் 15 சதவீதம் அதாவது ரூபா 17,751,250 மாத்திரம் ஆகும். | நிறுவனத்தில் தற்போது பாடநெறியை ஒருங்கிணைக்கும் உத்தியோகத்தர்கள் இருக்கின்றமையால் நிறுவனத்துக்கு கிடைக்கின்ற பாடநெறி விண்ணப்பங்கள் அதிகமானதால் முகாமைத்துவ சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் பாடநெறிகளை மேற்கொள்வதற்காக நிறுவனத்தில் பதிவு செய்துள்ள அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. | சகல பாடநெறிகளும் நிறுவனத்தின் வளப் பங்களிப்பாளர்களின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சான்றிதழ் பத்திரங்கள் 50,000 – 100,000 வரையான அளவில் அச்சிடும் நோக்கில் 2019 ஆம் ஆண்டின் போது பல்நோக்கு அச்சிடல் இயந்திரம் ஒன்று ரூபா 2,024,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் தேவைக்கு ஈடுகொடுக்காத வகையில் தொழில்நுட்ப மாதிரிகள் தயாரிக்காமல் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக இந்த இயந்திரம் தற்போது வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | உரிய இயந்திரம் தொடர்பான தீர்மானம் எடுப்பதற்காக நிதிப் பிரமாணம் 770 இன் கீழ் பரிசோதனை நடாத்துவதற்காக 2024.09.10 ஆம் திகதி குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. | விளைவற்று மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பொறுப்பாக இருக்க வேண்டியிருந்ததுடன் இயந்திரத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் மூலம் | 2023.11.30 ஆம் திகதி முதல் நிறுவனத்தின் கணக்காளர் பதவி மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி என்பன | சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு வருடாந்த |

| | | |
|---|---|---|
| அறிமுகப்படுத்தப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த அறிக்கையின் வரைவுடன் உரிய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் ஆண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் நிதிக் கூற்றுக்கள் 174 நாட்கள் தாமதமாகி 2024 ஆகஸ்ட் 21 ஆம் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வருடாந்த அறிக்கையின் வரைவு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 06 மாத கால எல்லை வரை வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக இறுதி நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை. | அறிக்கை குறித்துரைத்த திகதியில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |